விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 365 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை (19.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=

யாழில் மழை காரணமாக

## 71 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 71 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 15

## வட மாகாணத்தில் இடைவிடாது கொட்டித் தீர்த்த கன மழை

- வெள்ளத்தில் தத்தளிக்கும் பொதுமக்கள்
- இயல்பு வாழ்க்கை முழுமையாக ஸ்தம்பிதம்



11ஆம் பக்கம் பார்க்க

# அரசியலமைப்பை மாற்ற வேண்டும்

வஜிர அபேவர்த்தன எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

மாற்றமடைந்து வரும் உலக ஒழுங்குக்கு ஏற்றவகையில் எமது அரசியலமைப்பும் மாற்றப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## 50 நீர்த்தேக்கங்கள் வான் பாய்கின்றன

நீர்ப்பாசன திணைக்களம்

(கொழும்பு)

பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 50 இற்கும் மேற்பட்ட பிரதான நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 80 வீதம் வரை உயர்வடைந்துள்ளதாக 15

தொடரும் கனமழை

## வட மாகாணத்தில் 26 பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொடரும் கனமழையால் பல பாடசாலைகள் இடைத்தங்கல் முகாம்களாகவும் மேலும் சில பாடசாலைகள் நீரினால் சூழப்பட்டமையாலும் இயங்க முடியாத நிலை 15

## வடக்கு கல்வியமைச்சில் திரண்ட புதிய அதிபர்கள்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம் கிடைக்கப் பெற்றவர்களில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த சுமார் 140 அதிபர்கள் 15

## அமெரிக்கா பயணமானார் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

முன்னாள் நிதிய 15

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுங்கள்

சிறீதரன் எம்.பி கோரிக்கை



(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கிவைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உதவும் உள்ளங்களிடமும் தன்னார்வ அமைப்புகளிடமும் கோரிக்கை விடுத் 15

NLB தேசிய லொத்தர்
சுப்பர் பரிசாக
NLB MEGA MILLIONS
மெகா மிලියන්ස් மெகா மில்லியன்ஸ்
ரூ. 50 மில்லியன்
சிங்கப்பூர் சவாரிகள் 10
ரூ.மில்லியன் பரிசுகள்
ரூ.இலட்சம் பரிசுகள் 100 வீதம்
ரூ.1,000 பரிசுகள் 10,000
லொத்தர் சீட்டுக் கொள்வனவுக்கு
0114 607080
சீட்டிழுப்பு 30 டிசெம்பர்
(C-2193)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# நன்றி தெரிவிக்கின்றேன்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியேபோல
நண்ணிய நின்முன் இங்கு.

30.11.2023(வியாழக்கிழமை) நல்லை மங்கையர்க்கரசியின் சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும் அகமகிழ்ந்து வாழ்த்துத் தெரிவித்ததுடன் 14.12.2023 (வியாழக்கிழமை) சேவை நலன்பாராட்டினை கௌரவித்த அதிபர், ஆசிரியர் நலன்புரிக்கழகம் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பு :
மங்கையர்க்கரசி பாடசாலையில் 05.12.2023 செவ்வாய்க் கிழமை எனது அழைப்பை ஏற்று விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பித்துக்கொண்ட ஒத்தாசை வழங்கிய அதிபர், ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கும் ஏனைய நலன்விரும்பிகளுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
செல்வி பொ. தர்ஷிலா
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(18278)


## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7932)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 20.11.2023 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)

தோற்றம் : 21.03.1932 மறைவு : 20.11.2023

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.12.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் சேர் பொன்.இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ் - நாச்சிமார் கோவிலடி) நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

"சாயி போட்டோ"
1010/11, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(18274)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

## திரு. சிவப்பிரகாசம் சிவநாவலன் SLPS-III

( S.P, Trd (Sci) B.Ed. (Sci), DSM M.Ed. )

அவர்கள் கடந்த 13.12.2023 புதன்கிழமை
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றமையை இட்டு
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations!

(C-7933)

**யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**
**ஆசிரிய சகோதரத்துவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களிடையே வாய்ப்புற்றுநோய் ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடையே வாய்ப்புற்றுநோய் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் விசேட மருத்துவர் ஏ.எச்.பி.எஸ் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "மாணவர்களின் வாய்ப்பகுதியைச் சுற்றி வெள்ளை நிறத்தில் அடையாளம் காணப்படுமாயின் அது வாய்ப்புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம் என்றும் துரித உணவுகள் மற்றும் பொதி யிடப்பட்ட உணவுகளை அதிகமாக உண்பது இதற்கான காரணமாக இருக்கலாம். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்(5-6)

# போலியான வாக்குறுதிகள் நாட்டை முன்னேற்றாது



2024 ஆம் ஆண்டு இரண்டு பெரிய தேர்தல்களை எதிர்கொள்வதால் நாட்டிற்கு கடினமான ஆண்டாக இருக்கும் என்றும் மேலும் ஒவ்வொரு துறையிலும் பயனுள்ள மறுசீரமைப்பு இல்லாமல் நாட்டை முன்னேற்றாது என்பதை அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் இருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

(கொழும்பு)

அனைத்துக் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தேர்தல் நேரத்தில் மக்களை ஏமாற்றுவதை விட்டுவிட்டு, நாட்டின் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களிடம் பொய்யாகச் கூறிவந்தால் இந்த நாடு இன்னும் மூன்று மாதங்களிலேயே வீழ்ச்சியடையும் என்றும் ஆகவே அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார். (5-6)

# திருமண நிகழ்வில் ஒன்று கூடிய அரசியல் பிரமுகர்கள்



(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற திருமண நிகழ்வின் போது இலங்கையின் உயர்மட்ட அரசியல் வாதிகள் கலந்து கொண்டனர்.

இதில் முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

இதன்போது சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து அதிகம் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. (5-6)

# வணிக வட்டி வீதங்கள் கணிசமாக குறைய வாய்ப்பு



(கொழும்பு)

முதலாவது, இரண்டாவது தவணையைப் பெறுவதன் மூலம் நாம் சரியான பாதையில் செல்கிறோம் என்ற செய்தியை சர்வதேச நாணய நிதியம் உலகுக்கு அனுப்புகிறது. பொருளாதாரத்தை வலுப்படுத்த பெரும் உதவியாக உள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி கிடைத்தவுடன் உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தங்கள் பணத்தைக் கொடுக்கத் தொடங்கும். பின்னர் திறைசேரியில் வரவு செலவுத் திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பயன்படுத்தலாம்.

இது சாத்தியமானால், அதிக வட்டிக்கு பத்திரங்களை வாங்குவதற்குப் பதிலாக, குறைந்த விலையில் கடன்களைப் பெற முடியும்.

அப்போது வணிக வட்டி வீதங்கள் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கிறோம். வட்டி வீதத்தை 10-11 வீதமாகக் குறைக்க முடிந்தால், கடன் பெறவும் நிதிவசதிகள்மூலம் தொழில் தொடங்கவும் வாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.(5-6)

# இறக்குமதி செய்யப்பட்ட முட்டை 35 ரூபாவிற்கு விநியோகம்

## அரச வர்த்தக கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் லங்கா சதொச ஊடாக 35 ரூபாய் என்ற விலையில் விநியோகிக்கப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து ஒன்றரை கோடி முட்டைகளுடனான கப்பலொன்று நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந்தது.

உள்ளூர் சந்தையில் முட்டை விலையை கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (5-6)

# சர்வதேச அங்கீகாரத்தை பெற்ற சுகாதார சேவை

(கொழும்பு)

இலங்கையின் இலவச சுகாதார சேவை சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

யுனிசெப் எனப்படும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக், சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால வை அண்மையில் சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய யுனிசெப் அமைப்பின் தற்போதைய மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து சுகாதார அமைச்சின் செயலாளருக்கு இதன் போது அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு 2000இற்கும் மேற்பட்டோர் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் பாவனை தொடர்பில், 24 மணித்தியாலங்களுக்குள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 2121 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் விளக்கமறியலிலும் 133 பேர் புனர்வாழ்வுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (5-6)

# ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து விடுவாரோ?

## சுமந்திரன் எம்.பி



(மட்டக்களப்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை கலைத்துவிடுவாரோ? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் தொகுதிக்கிளை கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில வலது பக்கம் சிக்னலைப்போட்டுவிட்டு இடது பக்கம் வாகனத்தை செலுத்துபவர் தான் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப் போகின்றேன் என்று கூறும் போதே சந்தேகம் ஏற்படுகின்றது.

ஒருவேளைஅதற்கு முன்னதாக பாராளுமன்றத்தை கலைத்து விடுவாரோ என்று கூட தோன்றுகின்றது என தெரிவித்துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# சம்பியனான பங்களாதேஷ் அணி




19. வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணி 195 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

பங்களாதேஷ் மற்றும் ஐக்கிய அரபு அமீரக அணிகள் மோதுகின்ற இந்த இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய அரபு அமீரக அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத் தாடிய பங்களா தேஷ் அணி 8 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பில், ரகுமான 129 ஓட்டங்களை அதிகபடியாகப் பெற்றுக்கொடுத்ததுடன், பந்துவீச்சில், ஐக்கிய அரபு அமீரக அணி சார்பில் அஹமட் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இருந்தார்.

இதையடுத்து, 283 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஐக்கிய அரபு அமீரக அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 87 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் தோல்வியடைந்துள்ளது. (5-6)

# மும்பை இந்தியன்ஸ் ஜெர்சி தீயிட்டு எரிப்பு



மும்பை இந்தியன்ஸ் அணி புதிய கப்டனாக ஹர்திக் பாண்ட்யாவை அறிவித்த நிலையில், ரோகித் சர்மாவின் ரசிகர் ஒருவர் மும்பை அணி ஜெர்சியை எரித்த வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

குஜராத் டைட்டன்ஸ் அணியின் கப்டன் ஹர்திக் பாண்ட்யாவை 15 கோடிக்கு மும்பை இந்தியன்ஸ் வாங்கியது.

அதனைத் தொடர்ந்து, கப்டன் ரோகித் சர்மாவை நீக்கிவிட்டு 2024 சீசனில் ஹர்திக் பாண்ட்யாதான் அணிக்கு தலைமை தாங்குவார் என மும்பை இந்தியன்ஸ் அறிவித்தது.

இது ரோகித் சர்மாவின் ரசிகர்களுக்கு அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. சில ரசிகர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜெர்ஸி மற்றும் கொடிகளை எரித்தனர்.

இந்த நிலையில் ரசிகர் ஒருவர் ஜெர்ஸியை எரிக்கும் வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது. அந்த வீடியோவில் ஒருவர் மும்பை இந்தியன்ஸ் ஜெர்ஸியைத் தொங்கவிட்டு அதைத் எரித்து அதை இணையத்தில் வைரலாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்

## தீபக் சஹார் திடீர் விலகல்

இந்திய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 இருபது-20, 3 ஒருநாள் மற்றும் 2 டெ ஸ்ட் போட்டிகள் கொண்டதொடரில் விளை யாடிவருகிறது. இரு அணிக ளுக்கு இடையே நடந்த இருபது -20 தொடரில் இரு அணிகளும் 1-1 என சம நிலை வகித்தன.

இந் நிலையில் ஒருநாள் போட்டிக் கான தொடரில் இருந்து தீபக் சஹார் திடீரென விலகியுள்ளார். சொந்த வேலை காரணமாக விலகியுள்ளார் என பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

இதேபோல், டெஸ்ட் தொடரில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையின் முடிவில் அவர் நீக்கப்பட்டுள்ளார் எனவும் பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது.

ஒருநாள் தொடருக்கான இந்திய அணியின் விபரம் வருமாறு:

ருத்ராஜ் கெயிக்வாட், சாய் சுதர்சன், திலக்வர்மா, ரஜத் படிதார், ரிங்குசிங், ஸ்ரேயாஸ் அய்யர், கே.எல்.ராகுல் (கப்டன்), சஞ்சுசாம்சன், அக்சர் படேல், வோஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், சஹல், முகேஷ் குமார், ஆவேஷ்கான், அர்ஷ்தீப் சிங், ஆகாஷ் தீப். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிமன்றில் மகிந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## பியர் பொலியர்



(ஒட்டாவா)

கனடாவில் கென்சவேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் சர்வதேச நீதிமன்றத்தில் மகிந்த தரப்பினருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என கட்சியின் தலைவர் பியர் பொலியர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில்,

"கனடாவில் கென்சவேட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் தமிழர்கள் இனப்படுகொலை தொடர்பில் என்ன நிலைப்பாட்டை எடுக்கவுள்ளீர்கள்" என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்ட அரசாங்க உறுப்பினர்களிற்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பதே தற்போது என்னுடைய திட்டம்.

இதன் மூலம் சர்வதேச தடைகளை விதிப்பதன் ஊடாக அவர்களது தனிப்பட்ட நிதிகளை முடக்க முடியும்.

இதேவேளை சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளை பயன்படுத்துவோம்.

இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்காக இலங்கை அரசாங்கத்தின் உறுப்பினர்களை இனங்கண்டு சட்டநடவடிக்கைகளிற்கு உட்படுத்தலாம்.

அத்துடன் தமிழர்களிற்கு எதிராக தொடரும் இனப்படுகொலை நடவடிக்கைகளிற்காக இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து கண்டிப்போம், தனிமைப்படுத்துவோம் என குறிப்பிட்டுள்ளார். (5-6)

# கோயில் மீது விழுந்த மரம்



(திருமலை)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் கன மழை பெய்து வருகின்றது.

இந்நிலையில் திருகோணமலையின் இலிங்கநகர் பாலமுருகன் ஆலய பின்புற மதில் நேற்று இடிந்து வீழ்ந்துள்ளது.

அதேவேளை பாலமுருகன் ஆலயத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடைத்தங்கல் முகாம்களுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (5-6)

# ரணில் மீண்டும் ஜனாதிபதியாவார்

## வஜிர அபேவர்தன

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பல இலட்சம் வாக்குகளை பெற்று மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவார் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு அரசியல்வாதி என்பதை விட பொருளாதார நிபுணராக இருப்பதால் நாட்டை முன்னேற்ற வேண்டிய தெளிவான பார்வை அவரிடம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

நாடு எங்கு இருக்க வேண்டும் என்ற தெளிவான பார்வையுடன் அவர் செயற்படுவார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய எதிர்க்கட்சியும் தங்களுடையது என தெரிவித்த வஜிர அபேவர்தன, இறுதி நேரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேரும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (5-6)

# முதலைக்கடிக்கு இலக்கான நபர்

(கிளிநொச்சி)

பிரமந்தனாறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதலைக்கடிக்கு இலக்கான ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ள நிலையில் முதலைகளின் வரத்தும் அதிகரித்துள்ளது. (5-6)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்

திரு. **க.சசிகரன்** அவர்களின் மாமனார்

**அமரர்.திரு. கந்தையா வைத்திலிங்கம் (தம்பு)**



அவர்கள் 16.12.2023 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(182751)

பாடசாலைச் சமூகம், யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை.


# இராசிபலன்

19.12.2023
மார்கழி 03, செவ்வாய்க்கிழமை
சப்தமி பிற்பகல் 4.19 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 3.14 மணிவரை
சுபநேரம் -10.53-12.23 மணிவரை
இராகுகாலம்-3.23-4.53 மணிவரை

சந்திராஷ்டமம்
ஆயிலியம்.

**வளவன்**

**மேஷம்** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** — செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், மனித தெய்வ வழிபாடு மகத்துவம் தரும்.

**கடகம்** — மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**சிம்மம்** — உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** — கூட்டு முயற்சிகள் வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கௌரவமான நாள்.

**துலாம்** — எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** — வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**தனுசு** — உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** — உடல் நலனில் கவனம் தேவை, உறவினர் வருகையால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** — பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

பேசுகிறவன் விதைக்கிறான் கேட்பவன் அறுவடை செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு எதிராக மகிந்த நடத்தியது போர் அல்ல இனப்படுகொலையே

(யாழ்ப்பாணம்)


**மகிந்த ராஜபக்ஷ தமிழர்கள் மீது நடத்தியது போர் அல்ல இனப்படுகொலையே என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.**

யாழில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழினத்துக்கு நடந்தது இனப்படுகொலையே. காசா மக்களுக்கும் அதுதான் நடக்கின்றது.


தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தியவர்கள் இன்று பொருளாதாரப் போரை நடத்துகின்றார்கள்.

இந்தப் பொருளாதாரப் போரானது சாதாரண, நடுத்தர வர்க்க மக்களுக்கும், மிகவும் கஷ்டப்பட்ட மக்களுக்கும் எதிராகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வளவு கால மும் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த விடயங்களை, ஆட்சியாளர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று அவற்றைக் கேள்விக்குட்படுத்தாமல் இருந்த சிங்கள மக்கள் இன்று தங்களுக்கே நடந்த பின்னர்



தமிழர்களுக்கு எவ்வாறு நடந்திருக்கும் என்பதை விளங்கிக் கொள்வதாகத்தான் நிலைமை இருக்கின்றது எனத் தெரிவித்தார். (5-6)

# தென்மராட்சியில் 20 பேர் பாதிப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழியில் உள்ள ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி குடிமனைகளுக்குள் மழை நீர் புகுந்த நிலையில் ஐந்து குடும்பங்களும் அப்பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (5-6-30)

# போதனாசிரியர்களிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சிநிலையங்களில் போதனாசிரியர்களின் வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமையலாளர்,கணனி பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளி சீராக்கி தொழி நுட்பவியலாளர், அலுமினியம் பொருத்துநர்,கணனிபட வரைஞர்,கட்ட நிர் மானவியலாளர், தகவல் தொடர்பாடல் தொழி நுட்பவியலாளர் போன்ற கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல், அத்துடன் மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம்.

அல்லது சம்மந்தப்பட்ட துறையில் NVQ-4 உடன் குறைந்தது 2 வருடம் கற்பித்தல் அனுபவம். அல்லது சம்மந்தப்பட்ட துறையில் ஒரு வருட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் முழுநேர டிப்ளோமா சான்றிதழ் ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம். அல்லது சம்மந்தப்பட்ட துறையில் பட்டச் சான்றிதழ் ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம். அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான அனுபவம் மேற்குறித்த தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் நாளை புதன் கிழமைக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம்.

இல.12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவோ அல்லது நேரில் சமர்ப்பிக்க முடியும் என யாழ். இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5-6)

# பெய்து வரும் அடைமழையால் யாழில் 4 குடும்பங்கள் பாதிப்பு

## மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக யாழ்ப்பாணத்தில் நான்கு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா நேற்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 18 உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மழை அனர்த்தத்தினால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

உடுவில் தெற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/205 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/261, ஜே/276, ஜே/285 ஆகிய கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங்களைச்சேர்ந்த 12 உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஜே/261 கிராம சேவகர் பிரிவில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (5-6)




## போதைப் பொருளுடன் யாழில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் மூவர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி பகுதியில் போதை பொருள் பாவனையில் சில இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் 20, 21 மற்றும் 23 வயதுடைய மூவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து ஹெரோயின் மற்றும் மாவா பாக்கு என்பவை மீட்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-33)

# பிணமுருங்கை மயானத்தை சீர்செய்து தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிணமுருங்கை இந்து மயானத்தை சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தின் நாவற்குழி கிழக்கு , கோவிலாக்கண்டி மற்றும் தச்சன்தோப்பு ஆகிய மூன்று ஊர்களையும் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் இந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

அந்நிலையில் குறித்த மயானம் நீண்ட காலமாக புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமையால் , எரிகொட்டகைகள் , மயானத்திற்கு செல்லும் வீதி என்பன மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றமையால் அவற்றை சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-33)



நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவ கொடியேற்றம் நேற்று பக்திபூர்வமாக இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# 300 கிலோ கத்தரிக்காய் திருடிய இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் சுமார் 300 கிலோ கிராம் கத்தரிக் காயை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள கத்தரித் தோட்டம் ஒன்றில் கடந்த 7ஆம் திகதி இரவு பெரும் தொகையான கத்தரிக்காய்கள் திருடப்பட்டதையடுத்து தோட்ட உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கத்தரிக்காய்களை திருடிய குற்றத்தில் திருநெல்வேலி பகுதியை சேர்ந்த 20 வயது இளைஞனை நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர். (5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா திரிபு தொடர்பில் பொதுமக்கள் அவதானம்

## சுகாதார அமைச்சு

**(கொழும்பு)**


**வெளிநாடுகளில் பரவும் புதிய நோயினால் இலங்கைக்கு எப்போதும் ஆபத்து என்பதால் இலங்கை எச்சரிக்கையுடன் உள்ளது என சுகாதார அமைச்சின் கொரோனா விவ காரங்களிற்கான ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.**

கேரளாவில் கொரோனா வைரசின் புதியமாறுபாடு வேக மாக பரவிவருவதை தொடர்ந்து எச்சரிக்கையாக உள்ளதாக இலங்கையின் சுகாதார அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

கேரளாவில் மிகவேகமாக பரவும் இலகுவில் அடையாளம் காணமுடியாத கொரோனா வைரசின் புதிய மாறுபாடு பரவிவருவதை தொடர்ந்து பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

48 மணித்தியாலங்களிற்கு மேல் காய்ச்சல் உட்பட நோய் அறிகுறிகள் தென்பட்டால் மக்கள் வைத்திய உதவியை நாடவேண்டும். தொற்று பரவல் ஆபத்தை தவிர்ப்பதற்கான முகக்க வசங்களை முடிந்தளவு பயன் படுத்தவேண்டும். மருத்துவ பரிசோதனைகளை முன்னெடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார். (5-6)

# பெரமுன அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்திற்கு முன்னால் புண்ணாக்கு வாளியுடன் ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றுள்ளது.

மக்கள் போராட்டத்தின் தலைவர் சானக பண்டார உள்ளிட்ட குழுவினரே இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். பெரமுனவின் பொதுச் செயலாளரான சாகர காரியவசத்திற்கு எதிராகவே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டத்தையடுத்து பத்தர முல்லை - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தை சூழவுள்ள பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (5-6)

# நோயாளர் காவு வண்டி ஊழியர்கள் சங்கம் பகிஷ்கரிப்பு


(கொழும்பு)

மத்திய மாகாண அரச சுகாதார சேவை நோயாளர் காவு வண்டி ஊழி யர்கள் சங்கம் இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

15 நோயாளர் காவு வண்டி சாரதி கள் வேறு நிறுவனங்களுக்கு இட மாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக மத்திய மாகாண அரச சுகாதார சேவை நோயாளர் காவுவண்டி ஊழியர் சங்கம் தெரி வித்துள்ளது. (5-6)


## மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி. வசந்தமலர் பத்மானந்தன்



**வாழ்த்துக் கவி**

திருவிளக்குத் திரிபோல
குழந்தைகள் சுடர்விட உதித்தமலர்
குடுகுடு நடையும் கலகலபேச்சும்
குறையாத இளமையும் கொண்ட பாசத்தாயே
கிளிநொச்சி ம.வியின் வசந்தகால மலர் நீங்கள்!
தெளிந்த அன்பில் தாய்மை சேர்த்து
ஆரம்பக் கல்விக்கு ஆளுமை சேர்த்து
எல்லோர் மனதையும் உம்வசம் சேர்த்து
மணிவிழாக் காணும் அன்புக்கடலே!
தாயைப்பிரியும் குழந்தை போல தவிக்கின்றோம்
இனிவரும் நாட்களில் நெல்லுக்குள் மணிபோல
என்றும் நிறைவாய் வாழ,
வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றோம்!

**சேவைக்காலம்**

06.08.1988 -27.01.1992 கிளி/பூநகரி நல்லூர் ம.வி
28.01.1992 -31.12.1993 கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
01.01.1994 -31.08.1994 கிளி/பூநகரி நல்லூர் ம.வி
01.09.1994 -31.12.2007 கிளி/கிளிநொச்சி ம.வி
01.01.2008 -30.12.2010 கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலயம் (ஆசிரியர்)
01.01.2011 -04.02.2015 கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலயம் (பிரதி அதிபர்)
05.02.2015 -31.12.2019 கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (ஆசிரியர்)
01.01.2020 -19.12.2023 கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (உதவி அதிபர்)

19.12.2023 இன்று தனது சேவையை நிறைவு செய்து பணி நிறைவு பெற்று மணிவிழாக் கொண்டாடுகின்ற எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவின் உதவி அதிபரான திருமதி. வசந்தமலர் பத்மானந்தன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதோடு அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய பிரார்த்திக்கின்றோம்.

(C-7939)

Congratulations

**வாழ்த்துபவர்கள்:**
**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் நலன்புரிச்சங்கம்**
**கிளி/கிளிநொச்சி ம.வி.**



## விஷேட பொதுக்கூட்டம்

### யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**காலம் - 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி**

**இடம் - கல்லூரியின் பிரதான மண்டம்**

**கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள்**

1. மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் எண்ணிக்கையை உயர்த்துவதில் பழைய மாணவர்களின் பங்களிப்பு தொடர்பில் ஆராய்தல்.
2. பழைய மாணவர் சங்க நிர்வாகத்தை மேம்படுத்தலும் செயற்பாடுகளை விரிவுபடுத்தலும்.
3. பொதுக்கூட்டத்தை நடாத்துவதற்குரிய ஏதுக்களை இனம் காணல்.
4. கல்லூரியின் நலன் சார்ந்த விடயங்களையும் மாண்பையும் பாரம்பரியச் சொத்துக்களையும் பேணிக் காப்பதில் பழைய மாணவர் சங்கத்திற்கும் பழைய மாணவர்களுக்கும் இருக்கும் பொறுப்பை ஆராய்தல்.
5. பழைய மாணவர்களின் மாபெரும் ஒன்று கூடலுக்கான ஆயத்தப் பணிகள் பற்றி கலந்துரையாடல்.

**செயலாளர்-சி. சுகிர்தரூபன்.**
**(077 310 1357)**

(18277)



## சேவை நலன் பாராட்டும் மணி விழா வாழ்த்துக்களும்



எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடனான
கல்விச் சேவை புரிந்து இன்று
19.12.2023 ஓய்வு பெறும் ஆசிரியர்

திருமதி. **புஸ்பலதா மனோகரன்**

அவர்களது சேவையினை பாராட்டுவதோடு
அவரது ஓய்வு காலம் சிறக்கவும்,
மேலும் பல சமூகப் பணிகள் புரிந்து
நீடூழி காலம் வாழ வேண்டும்
எனவும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes


வாழ்த்துவோர்-
அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா
ஊழியர்கள், மாணவர்கள்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.

(8238)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## பெண்ணின் சிறுநீரகத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள 300 கற்கள்



(தாய்பெய்)

தாய்வானில் யுவதி ஒருவரின் சிறுநீரகத்தில் இருந்து 300இற்கும் மேற்பட்ட கற்கள் அகற்றப்பட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தாய்வானில் சியோ பு என்ற 20 வயது இளம் பெண்ணுக்கு சிறுநீரக அறுவை சிகிச்சை செய்து அவரது சிறுநீரகத்தில் இருந்து சுமார் 300 கற்கள் அகற்றப்பட்டுள்ளன.

சியோ பு தண்ணீர் குடிக்கும் பழக்கம் இல்லாதவராக இருந்துள்ளார்.

குறித்த பெண் தாகம் எடுத்தால் கூட தண்ணீருக்குப் பதிலாக பபிள் டீ எனப்படும் டீ வகையை மட்டுமே அதிகமாகப் பருகி வந்துள்ளார். அதனால் கழிவுகளை வெளியேற்ற தேவையான நீர்ச்சத்து இல்லாமல் கற்கள் உருவா கியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ரி-5)

## அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல்

### 90 பேர் பலி



(காசா)

வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் சுமார் 90 பேர் கொல்லப்பட்டதோடு 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஜபாலியா நகரில் அல்-பார்ஷ் மற்றும் அல்வான் குடியிருப்புத் தொகுதி மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

காயமடைந்தவர்களை மீட்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் மேலும் பல உடல்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நோயாளிகளால் நிரம்பி வழியும் மருத்துவமனைக்கு குழந்தைகள் உட்பட காயமடைந்தவர்கள் பலர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (5-[illegible])

# காசா மீது பயங்

# நடத்திய இஸ்ரே

## 1000 பாலஸ்தீனியர்கள் தடுத்

(காசா)

**இஸ்ரேல் இராணுவம் காசா மீது பயங்கர நடத்தி அங்கிருந்து 1000 பாலஸ்தீனியர்கள வைத்துள்ளது.**



ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் காசாவில் கண்மூடித்தனமான வகையில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வரை போர் நிறுத்தம் செய்யப்படாது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் போர் நிறுத்தத்திற்கு அழுத்தம் கொடுத்த போதிலும் தாக்குதலை சிறிதும் குறைக்கவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் இது வரை இல்லாத அளவில் மூர்க்கத்தனமாக வகையில்


# கண்டம் விட்டு கண்டம் பாயும் ரஷ்யாவின் புதிய ஏவுகணை

(மொஸ்கோ)

மொஸ்கோவின் தென் மேற்கே உள்ள கலுகா பிராந்தியத்தில் உள்ள கோசெல்ஸ்க் தளத்தில் ரஷ்ய ராக்கெட் படைகள் புதிய Yars எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

23-மீற்றர் நீளமுள்ள RS-24 (Yars) ஏவுகணையானது, பல்வேறு இலக்குகளில் பல அணு ஆயுதங்களை கொண்டு தாக்கும் திறன் கொண்டது.

இந்நிலையில் "கோசெல் [illegible]



பாய ஏவுகணைப் படைகள் Yars கண்டம் விட்டு கண்[illegible] பாயும் ஏவுகணையை ஒரு சிலோ லாஞ்சரில் ஏற்றியது" என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது சர்வதேச அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கரத் தாக்குதல் ரேல் இராணுவம்

## டுத்துவைப்பு

ங்கர தாக்குதல்
ர்களை தடுத்து






தாக்குதல் நடத்தியுள்ளது. அத்தோடு இஸ்ரேல் இராணுவம் 1000 பேரை தடுத்து வைத்துள்ளது.


ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு, கைகளை தூக்கினால் நாங்கள் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தமாட்டோம் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் இராணுவம், நேற்றுமுன்தினம் இதுவரை இல்லாத அளவிற்கு மிகப் பெரிய சுரங்கப்பாதையை கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

எராஸ் எல்லைப் பகுதியில் சுரங்கப்பாதை சிறிய வகை வாகனம் செல்லும் வகையில் மிகப்பெரியதாக உள்ளது எனத் தெரியவந்துள்ளது. இந்த சுரங்கப் பாதை பல கோடி ரூபாய் செலவில் பல ஆண்டுகளாக கட்டப்பட்டுள்ளது.

அனைத்து வகை வசதிகளும் கொண்டதாக உள்ளது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (5-6)

## ஜப்பானுக்கு இராணுவ உதவி வழங்கவுள்ள அமெரிக்கா



(டோக்கியோ) ஜப்பானுக்கு இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

ஜப்பான் அதன் அண்டை நாடுகளான சீனா, வட கொரியா போன்றவற்றிடம் இருந்து அவ்வப்போது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையை எதிர் கொள்ள நாட்டின் இராணுவ பலத்தை அதிகரிக்க ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவிடம் இருந்து இராணுவ உதவியை ஜப்பான் அரசாங்கம் கோரியது. எனவே ஜப்பானுக்கு இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

அதன்படி சுமார் ரூ.489 கோடி மதிப்பிலான சைட் விண்டர் ஏவுகணை உட்பட பல்வேறு நவீன ஆயுதங்களை வழங்க அமெரிக்க பாதுகாப்பு துறை ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

## அமெரிக்காவில்
# விமான விபத்து 3 பேர் உயிரிழப்பு




(வோஷிங்டன்) அமெரிக்காவில் ஓரிகான் பகுதியில் சிறிய விமானம் ஒன்று சென்று கொண்டு இருந்தது. ஒற்றை இயந்திரம் கொண்ட அந்த விமானம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில், மின் இணைப்பு கம்பிகள் மீது திடீரென மோதி விபத்தில் சிக்கியது.

இதில் 3 பேர் உயிரிழந்தனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்து, போர்ட் லேண்ட் பகுதிக்கு தெற்கே 58 மைல்கள் தொலைவில், சேலம் பகுதிக்கு 12 மைல்கள் தென்மேற்கே இன்டிபெண்டன்ஸ் என்ற இடத்தில் நடந்துள்ளது.

அந்த பகுதியில் உயர் மின்னழுத்த மின் இணைப்புகள் செல்கின்றன. அந்த மின் இணைப்பை, மின்சார நிறுவனம் நிறுத்திய பின்னரே, விபத்து நடந்த பகுதிக்கு சென்று தீயை அணைக்க முடியும் மற்றும் விபத்து நடந்த பகுதியை ஆய்வு செய்ய முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

## யும்
## ண



மைச்சகம்
ரப்பை ஏற்
து.(5-6)

## செங்கடல் வழியான பயணத்தை நிறுத்திய முக்கிய நிறுவனங்கள்




(சனா) செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்துவதால் குறித்த பாதை வழியாக தங்கள் கப்பல்கள் பயணிப்பதை முன்னணிக் கப்பல் நிறுவனங்கள் நிறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து டென்மார்க்கில் தலைமையகத்தைக் கொண்டு செயற்பட்டு வரும் முன்னணி கப்பல் போக்குவரத்து நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

எனவே, அந்தக் கடல் பாதை வழியாக நிறுவனத்தின் கப்பல்கள் இயக்கப்படுவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்துவதால் அவர்களுக்கோ, காசாவில் போரிடும் ஹமாஸ் அமைப்பினருக்கோ இராணுவ ரீதியில் எந்தப் பலனும் கிடைக்காது.

இருப்பினும், உள்நாட்டில் தங்களுக்கான ஆதரவைப் பெருக்கிக் கொள்வதற்காக இத்தகைய தாக்குதல்களில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஈடுபடுவதாக சர்வதேச ஊடகங்கள் மேலும் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்களின் தகவல்கள் திரட்டல்

## மோ.வாகன போக்குவரத்து திணைக்களம்

(கொழும்பு)

வருமான அனுமதிப்பத்திரத்தை கொண்டிராத வாகனங்கள் தொடர்பான தகவல்களை திரட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

5 வருடங்களுக்கு அதிக காலம் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் தொடர்பில் அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் தகவல்களை கோரியுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பதிவு செய்யப்பட்டு பல வருடங்களாக பயன்படுத்தப்படாத சுமார் 23 இலட்சம் வாகனங்களை தடை செய்ய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வருவாய் உரிமம் புதுப்பிக்கப்படாத அல்லது மாற்றப்படாத வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-6)

# பொருளாதார குற்றவாளிகளுடன் அரசியல் கூட்டணி இல்லை



(கொழும்பு)

மக்கள் ஆணை இல்லாதவர்கள் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் குற்றவாளிகளுடன் எந்தவொரு அரசியல் கூட்டணியையும் உருவாக்க போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்து தேர்தல்களிலும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான பாரிய கூட்டணியில் தாம் போட்டியிடவுள்ளதாகவும் இதே நேரம் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களும் தம்மோடு இணைந்து செயற்பட்டு வருவ தாகவும் அக்கட்சியின் பிரதம அமைப்பாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார். (5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 500 | 450 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1300 | 1400 |
| தக்காளி | 700 | 700 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 150 | 150 |
| கோவா | 350 | 400 | 350 | 500 |
| கரட் | 400 | 540 | 550 | 600 |
| பூசணி | 180 | 180 | 150 | 200 |
| புடோல் | 300 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 500 | 500 |
| பாகற்காய் | 600 | 800 | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 600 | 500 | 300 |
| லீக்ஸ் | 350 | 380 | 350 | 450 |
| பீற்றூட் | 400 | 500 | — | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | — | — | 2400 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 320 |
| கத்தரிதம்புள்ள | 450 | 280 | 550 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 200 | 250 |
| தேசிக்காய் | 800 | 700 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 600 | 600 |
| வெங்காயப்பூ | -- | 1300 | — | — |
| முள்ளங்கி | 150 | 250 | — | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 180 | 150 | 200 |

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2994

### அர்ச்சனா

முதலாளி ; டேய் ! நான் கொஞ்சம் வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடுத்துட்டு வரேன் .நீ கடையப் பார்த்துக்க ?

கடை பையன் ; உங்களுக்கு எதுக்கு சிரமம் அய்யா.... நானே போய் அந்த ரெஸ்ட் டை எடுத்துட்டு வந்துடுறேன் நீங்க கடையிலியே இருங்க


முதலாளி ; ??? .

### கமிலஸ்

* while crossing bus stand *

~ தம்பி தம்பி.. 2 மணி பஸ் எப்ப பா வரும்.

: 2 மணிக்கு தான்டா வரும்.. முட்டா பயலே



### சத்தியா




### நிதுசன்




### அறிவழகி




### கடாவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் கிளி., முல்லை., மன்னார்

# மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

**வடக்கில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழை காரணமாக பெருவெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.**








நேற்று மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகளால் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் 1661 குடும்பங்களை சேர்ந்த 5204 பேர் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் 21 வீடுகள் பகுதியள வில் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத் தில் 1225 குடும்பங்களைச் சேர்ந்த 3757 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். மேலும் முத்து ஐயன் கட்டுக்குளத்தின் 4 வான்கதவுகள் திறக்கப்பட் டுள்ளதால் முத்து ஐயன் கட்டு, பேராறு, முத்து விநாயகபுரம், பண்டாரவன்னி, வசந்தபுரம் மற்றும் மன்னகண்டல் ஆகிய கிராமங்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

மன்னர் மாவட்டத்தில் 632 குடும்பங்களைச் சேர்ந்த 2245 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தின் மூன்று பிரதான ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந்து செல்வதால் தாழ் நிலப்பகு திகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

(5-6-100-285-299-316)

## முத்தையன்கட்டு குளத்தின் 4 வான்கதவுகள் திறப்பு



(நெளுக்குளம்)

முத்தையன்கட்டு குளத்தின் நீர்மட்டம் அதிகரித்தமை யால் 4 வான் கதவுகளும்திற க்கப்பட்டுள்ளன. வான் பாய்வ தனை அதிகளவான மக்கள் பார்வையிட்டு வருகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட த்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காண ப்படுகின்ற முத்துஜயன்கட்டு குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்திருக்கின்ற நிலை யில் குளத்தின் நான்கு வான்கதவுகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குளங்கள் வான்பாய்வதனை அதிகள வானமக்கள்பார்வையிட்டுவரு வதுடன் நீர்நிலைகளில் மீன் பிடித்தும் வருகின்ற நிலை யில் பொதுமக்களை அவதா ணமாக இருக்குமாறு அறிவு றுத்தப்பட்டுள்ளது.(5-6-299)

## வீதிக்கு குறுக்கே முறிந்து வீழ்ந்த மரம் அகற்றப்பட்டது



(தருமபுரம்)

கிளிநொச்சி ஏ-9 வீதியின் 155 ஆம் கட்டைப்பகுதியில் வீதிக்கு குறுக்கே பாலை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் அவ்வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

இதனையடுத்து மாவட்ட அனர்த்த பிரிவின் ஒருங்கி ணைப்பில் அரச மரக்கூட்டுத் தாபனம், வீதி அபிவிருத்தி அதி காரசபை, இராணுவத்தினர் மற் றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து வீதிக்கு குறுக்கே விழு ந்த மரத்தினை வெட்டி அகற் றியதோடு தடைப்பட்ட போக்கு வரத்தும் சீர்செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.(5-6-100)

## வான்பாயும் கரியாலை நாகபடுவான்



(முறிகண்டி)

கிளிநொச்சி - கரியாலை நாகபடுவான் குளத்திலிருந்து அதிக நீர் வெளியேறி வரு கின்றமையால் மக்களை அவ தானமாக இருக்குமாறு அறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட த்தின் துணுக்காய் பிரதேசத்தில் ஏற்பட்ட மழைவீழ்ச்சி காரண மாக குறித்த குளம் வான் பாய் ந்து வருகிறது.

இந்த நிலையில் குளத்தை பாதுகாப்பதற்காக, குளத்தின் வால்க்கட்டு பகுதி வெட்டப் பட்டும் துருசும் திறந்து விடப் பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்கள் அவதானமாக இருப்பதுடன் வாழ்வாதாரங்களையும் பாது காக்கும் வகையில் முன்னேற் பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது. (5-6-100)

## தொடரும் கனமழையால் மக்கள் பாடசாலைகளில் தங்கவைப்பு

வடக்கில் தொடரும் கன மழையால் பல பாடசாலை கள் இடைத்தங்கல் முகாம்க ளாகவும் மேலும் சில பாட சாலைகள் நீரினால் சூழப்பட் டமையாலும் இயங்க முடி யாத நிலை காணப்படுகின்றது.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பாடசாலை களும் கிளிநொச்சி மாவட் டத்தில் 7 பாடசாலைகளும் மன்னார் மாவட்டத்தில் 2 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 9 பாடசா லைகளும் நேற்று கற்றல் செயற்பாடுகளுக்காக இயங் கவில்லை என்று வடக்கு மாகாணக் கல்வித் திணை க்கள அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 357





"இது உண்மையானால் அந்தச் சிறு பிள்ளையை வைத்துக் கொண்டு என்னிடம் அவ்வளவு கேள்வி கேட்டீர்களே ஏன்? எனக்கு அவமானமாயிருந்தது!" என்று நந்தினி கூறியது போது, அவள் கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.

பழுவேட்டரையர் துடிதுடித்துப் போனார். "வேண்டாம், என் கண்ணே! இப்படி! என்னைத் தண்டிக்கவேண்டாம்!" என்று கூறி, நந்தினியின் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துச் சமாதானம் செய்தார்.

"ஆயினும் உன்னுடைய காரியங்கள் சில எனக்கு அர்த்தமாகவில்லை. என்ன, ஏது, எதற்காக என்று கேட்க எனக்கு உரிமை இல்லையா?" என்றார்.

"கேட்பதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு. சொல்வதற்கும் எனக்கு உரிமையுண்டு. யார் இல்லை என்றார்கள்? அந்நியர்கள் முன்னால் கேட்க வேண்டாம் என்றுதான் சொன்னேன். என்ன வேண்டுமோ இப்போது கேளுங்கள்!" என்றாள்.

"ஆதித்த கரிகாலனுக்கு நீ எதற்காக ஓலை கொடுத்து அனுப்புகிறாய்? கடம்பூர் மாளிகைக்கு எதற்காக அவனை அழைக்கச் சொல்கிறாய்? அவன் அல்லவா நம்முடைய யோசனை நிறைவேறுவதற்கு முதல் விரோதி?" என்றார் பழுவேட்டரையர்.

"இல்லை, இல்லை! ஆதித்த கரிகாலர் நம் முதல் விரோதி இல்லை. அந்தப் பழையாறைப் பெண் பாம்புதான் நம் முதல் விரோதி.

அவளை எதற்காக நம் அரண்மனைக்கு நான் அழைத்தேன்? அந்தக் காரணத்துக்காகவே தான் ஆதித்த கரிகாலனைக் கடம்பூருக்கு அழைக்கச் சொல்கிறேன்.

நாதா! நான் அடிக்கடி சொல்லி வந்திருப்பதை இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

இளைய பிராட்டி குந்தவை தன் மனத்திற்குள் ஏதோ ஒரு தனி யோசனை வைத்திருக்கிறாள் என்று சொல்லி வந்தேன் அல்லவா? அது என்னவென்று இப்போது கண்டுபிடித்து விட்டேன்.

மற்ற எல்லாரையும் விலக்கி விட்டு, அவளுடைய இளைய சகோதரன் அருள்மொழிவர்மனைத் தஞ்சாவூர்ச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க அவள் தீர்மானித்திருக்கிறாள்.

அவளுடைய சூழ்ச்சிக்கு எதிர் சூழ்ச்சி செய்து அவளுடைய நோக்கம் நிறைவேறாமல் செய்ய வேண்டும். காஞ்சிக்கு நான் ஓலை அனுப்பியதன் காரணம் இப்போது தெரிகிறதல்லவா?" என்று நந்தினி கேட்டுவிட்டுப் பழுவேட்டரையரைப் பார்த்த பார்வை அவருடைய நெஞ்சை ஊடுருவி, அவர் அறிவை நிலை குலையச் செய்தது.

ஒன்றும் தெரியாவிட்டாலும் "ஆம் தெரிகிறது!" என்று குழறினார் அந்த வீரக்கிழவர்.

"நாதா! தாங்களும் தங்கள் முன்னோர்களும் புரிந்த அரும் பெரும் வீரச் செயல்களினாலேயே இன்று இந்தச் சோழ சாம்ராஜ்யம் இவ்வளவு பலகிப் பரவியிருக்கிறது.

இந்தத் தஞ்சைபுரியின் தங்க சிம்மாசனத்தில் ஒரு நாளாவது தங்களை ஏற்றி வைத்துப் பார்க்கும் வரையில் இந்தப் பாவியின் கண்கள் இரவிலும் பகலிலும் தூங்கப் போவதில்லை. அதற்குள்ளே எந்த விதத்திலாவது தங்களுக்கு என் பேரில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் தங்கள் உடைவாளினால் என்னை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று விடுங்கள்!" என்றாள் நந்தினி.

"என் கண்ணே! இத்தகைய கர்ண கடூரமான மொழிகளைச் சொல்லி என்னைச் சித்திரவதை செய்யாதே!" என்றார் பெரிய பழுவேட்டரையர்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காளைமாட்டின் பால்

(நேற்றைய தொடர்ச்சி..)



அவன் அவளைத் திட்டிக் கொண்டே நெருங்கி, "முட்டாளே, நீ என்ன பைத்தியமா? இரவு நேரத்தில் யாராவது துணி துவைப்பார்களா?" என்று தன் ஈட்டியை ஆட்டிக் கொண்டே கேட்டான்.

"ஏன்? இரவு நேரத்தில் ஆற்றில் தண்ணீர் இருக்காதா பகலில்தான் இருக்குமா இரவில் ஏன் துவைக்கக் கூடாது?" என்று பீர்பாலின் மகள் வாதம் செய்தாள். "உனக்கு அறிவில்லையா? பக்கத்தில் சக்கரவத்தியின் மாளிகை இருக்கிறது. பாவம் உன்னால் அவர் தூக்கம் கலைந்து விட்டது. நீ உடனே இங்கிருந்து போய்விடு" என்றான் காவலன்.

"அப்புறம் துணிகளை யார் துவைப்பது? நீ செய்வாயா" என்றாள் அவள். காவலன் கோபத்துடன், "அதிகப்பிரசங்கி! யார் நீ?" என்று கத்தினான். உடனே, அவள் சிரித்துக் கொண்டே "நான் ஒரு பெண்!" என்றாள். "திமிர் பிடித்தவளே! நீ யாருடைய பெண்?" என்றான் காவலன். "நான் என் அப்பாவுடைய பெண்!" என்று இடக்காக அவள் பதில் சொல்ல, காவலன் பொறுமையிழந்தான்.

"உன்னை சக்கரவத்தியிடம் இழுத்துப் போகிறேன். இதேபோல் அங்க பதிலளித்தால், அவர் உனக்கு சவுக்கடி கொடுப்பார்" என்று காவலன் அவளை இழுத்துக் கொண்டு அக்பரிடம் சென்றான். அக்பரின் முன் நிறுத்தப்பட்ட பீர்பாலின் மகளின் முகத்தில் பயம் துளிகூட இல்லை. புன்சிரிப்புடன் தைரியமாக அவள் நிற்க, காவலன் அவள் இரவில் துணி துவைப்பதைப் பற்றி அக்பரிடம் கூறினான். அக்பர் கோபத்துடன் "என்னம்மா? இரவில்தான் துணி துவைக்க நேரம் கிடைத்ததா? என்றார். "ஆமாம் பிரபு! பகலில் நேரம் கிடைக்கவில்லை. இன்று மாலைதான் என் அப்பாவுக்கு பிரசவ வலி ஏற்பட்டு ஒரு குழந்தை பிறந்தது. இருவருக்கும் வேண்டிய பணிவிடைகள் செய்துவிட்டு, துணிகளை துவைக்க இப்போது வந்தேன்" என்றாள் அவள்.

"என்ன உளறுகிறாய்?" என்றார் அக்பர் கோபத்துடன். "நான் உளறவில்லை பிரபு. உண்மையைத்தான் சொல்கிறேன். இன்று மாலைதான் என் அப்பாவுக்குக் குழந்தை பிறந்தது" என்றாள் அவள். "முட்டாளே! மறுபடியும் பைத்தியம் போல் உளறாதே! உன் அம்மாவுக்குக் குழந்தை பிறந்தது என்று சரியாகச் சொல்!" என்று சீறினார் அக்பர். "இல்லை பிரபு! என் அப்பாவுக்குத்தான் குழந்தை பிறந்தது" என்று தான் சொன்னதையே திரும்பித் திரும்பிச் சொன்னாள் அவள். "உனக்கு என்ன பைத்தியமா? உன் அப்பாவுக்கு எப்படி குழந்தை பிறக்கும்?" என்று எரிமலை போல் அக்பர் வெடித்தார்.

"இதில் கோபப்பட என்ன இருக்கிறது பிரபு? காளை மாடு பால் கொடுக்க முடியும் என்றால், ஓர் ஆணினால் குழந்தையைப் பெற முடியாதா?" என்று அவள் கேட்டவுடன், அக்பருக்கு 'சுரீர்' என்று உறைத்தது. உடனே, அவருக்கு விளங்கி விட்டது. அவர் கோபம் எல்லாம் குறைந்து விட்டது.

"பெண்ணே! நீ பீர்பாலின் மகளா?" என்று அக்பர் கேட்டார். "ஆம், பிரபு!" என்றாள்.

"பீர்பாலைத் தவிர வேறு யாருக்கு இப்படியெல்லாம் யோசனை தோன்றும் பெண்ணே! பீர்பாலை வீணாக காளை மாட்டின் பாலைத் தேடி அலையவேண்டாம் என்று சொல்! அதை நீயே கொடுத்து விட்டதாக சொல்!" என்ற அக்பர் பொற்காசுகள் நிரம்பிய பை ஒன்றை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட அவள் அவரை வணங்கி விட்டு வீடு சென்றாள்.

அவள் சென்றபின் அக்பர் தனக்குத்தானே நினைத்துக் கொண்டார். "சே! இந்த ஜாலிம்கான் பீர்பாலை சிக்க வைக்க வேண்டும் என்றே காளை மாட்டின் பால் கொண்டு வரச் செல்லி என்னையும் முட்டாள் ஆக்கி விட்டான்" ஒரு பெண்ணின் முன்னால் மூக்கு உடைபட்டது தான் மிச்சம்" என்று எண்ணிய அக்பருக்கு அவன் மீது கோபம் கோபமாய் வந்தது.

மறுநாள் ஜாலிம்கான் வாழ்நாளில் கேட்டிராத வார்த்தைகளால் அக்பரிடம் திட்டு வாங்கினார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்க வேண்டு மானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.
~ ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 'யாழ்' இசையால் பெருமையடைந்த யாழ்ப்பாணத்தை பெருமைப்படுத்திய கில்மிசா

சீ தமிழ் தொலைக்காட்சி நடத்துகின்ற சரிகமப போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றிய எங்கள் யாழ்ப்பாணத்து மாணவி உதயசீலன் கில்மிசா வெற்றி வாகைசூடி மகுடம் தரித்தார் என்ற செய்தியால் ஈழத் தமிழ் மக்கள் புளகாங்கிதம் எய்தியுள்ளனர்.

இசை உலகில் அனைவரையும் தன்பால் ஈர்த்த சீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப நிகழ்ச்சியில் எங்கள் ஈழத் தமிழ்ப் பிள்ளைகள் பங்குபற்றுவதென்பது எமக்குப் பெருமையும் புகழும் தரவல்லது.

அந்தளவுக்கு அந்த நிகழ்வு இசை இரசிகர்களை ஆட்கொண்டுள்ளது.

கோடிக்கணக்கான இசை இரசிகர்களை ஆட்கொண்ட சரிகமப போட்டி நிகழ்ச்சியில் எங்கள் பிள்ளைகள் பங்குபற்றுவதென்பதற்குள் எங்கள் ஈழத் தமிழர்களின் இசை வல்லமை நிரூபணமாகிறது.

அதிலும் இசை பிறந்த இந்திய தேசத்தில் – இசை விற்பன்னர்கள் சூழ்ந்த பாரத பூமியில் – மிக நுண்ணிய நுட்பத்துடன் இசையை இசைக்க வல்ல இளம் பிள்ளைகளைத் தாராளமாக கொண்ட தமிழகத்தில் நம் ஈழத்துப்பிள்ளைகள் ஈடுகொடுத்துப் போட்டியில் பங்குபற்றுவதென்பதை எவரும் சாதாரணமாகக் கருதிவிடக்கூடாது.

இவ்வாறு சரிகமப போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதே பெருமைக்குரியதாக இருக்கும்போது, அந்நிகழ்ச்சியில் பங்குபற்றி இசை விற்பன்னர்களான நடுவர்களின் அமோக ஆதரவைப் பெற்று கோடிக்கணக்கான இசை ரசிகர்களின் பேராதரவோடு எங்கள் யாழ்ப்பாண மண்ணின் புதல்வி உதயசீலன் கில்மிசா முதலிடத்தைப் பெற்று மகுடம் சூடினார் என்பது எங்கள் ஈழத் தமிழ்த் தேசத்துக்குப் பெருமை தருவதாகும்.

ஆம், சிவபூமி என்று போற்றப்படுகின்ற எங்கள் ஈழத் திருநாடு இசை வல்லமை கொண்ட இராவணேஸ்வரனால் ஆளப்பட்ட மண்.

இசையால் இறைவனை வசமாக்கும் பேராற்றல் கொண்ட இராவணேஸ்வரன் இசைக் கருவிகளை இசைக்கவல்லவன்.

தவிர, ஈழத் திருநாட்டின் தலைநகரான யாழ்ப்பாணம் இசைக் கருவியின் பெயரால் அமைந்த நகரம் எனும் போது எங்கள் ஈழத் தமிழ் மக்கள் எத்துணை தூரம் இசையைப் போற்றி வந்தனர் என்பது புரிதற்குரியது.

ஆக, இசைக்கருவியின் பெயரை தங்கள் தாய்நாட்டின் தலைநகராகக் கொண்ட ஈழத் திருநாடு இசையின் வடிவான ஆடவல்லானை அடிதொழுகின்ற மக்களைக் கொண்டது.

உண்மை. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் யாழ் என்ற இசைக் கருவியைச் செய்ய வல்லவர்கள் உள்ளனரா? என்று கேட்டாரெனில், யாழ் இசைக்கருவி எத்துணை பழைமைமிக்க தென்பது புரிதற்குரியது.

அத்தகு பழைமை மிகுந்த இசைக்கருவியின் பெயரில் அமைந்த யாழ் மண்ணின் புதல்வி கில்மிசா தமிழகத்தில் தன் இசை ஆற்றலை அர்ப்பணம் செய்து எங்கள் மண்ணுக்கும் எங்கள் இசைக்கும் பெருமை சேர்த்துள்ளார் எனும்போது அவரைப் பாராட்டுவதும் வாழ்த்துவதும் நம் கடமையாகிறது.

# போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு பிணை வழங்குவதை நிறுத்த வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

போதைப்பொருட்களுடன் கைது செய்யப்படுவர்களுக்கு பிணை வழங்கப்படுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டின் நீதிமன்றங்களில் 13 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்காக உள்ளன. தற்போது 14 இலட்சத்தை இது நெருங்கியுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் தாமதமடைவதால், அந்த வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் இன்னும் பல குற்றங்களில் ஈடுபடுவார்கள்.

தற்போதைய அரசாங்கம், ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் கைது செய்யப்படுபவர்களுக்கு பிணை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறைச்சாலைகளில் இடவசதி இல்லாதமையே இதற்கான காரணமாகும். இது உண்மையில் வேடிக்கையான விடயமாகும்.

இந்த நாட்டில் போதிய அளவு இடவசதி உள்ளது. இராணுவம் நினைத்தால் ஒரே மாதத்தில் அங்கு புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க முடியும்.

நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை துரிதமாக முடிக்க வேண்டும். சில வழக்குகள் 20 வருடங்கள் நடக்கின்றன.

இன்னும் சில வருடங்கள், 3 தலைமுறைகளாகக்கூட நடந்து வருகின்றன. குறைந்தது 6 மாதங்களிலேனும் வழக்குகளை முடிப்பதற்கான சட்டங்களை பாராளுமன்றில் கொண்டுவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# சுதந்திர மக்கள் பேரவையை கண்டு ஜனாதிபதிக்கு அச்சம்

## டிலான் பெரேரா

(கொழும்பு)

சுதந்திர மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் பதின்மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இருப்பதைக் கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஞ்சுவதாக டிலான் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே அதனை பிளவுபடுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

சுதந்திர மக்கள் பேரவையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்ற எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்பட தாம் தயார் என்றும் டிலான் பெரேரா கூறியுள்ளார். (ம-7)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வறுத்தலைவிளான் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக காங்கேசன்துறை பொலிஸ் விசேட பிரிவினருக்கு தகவல் கிடைத்தது.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு இணங்க காங்கேசன்துறை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த பகுதி அதிரடியாக முற்றுகையிடப்பட்டது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை கசிப்பு தயாரிக்கும் உபகரணங்கள் மற்றும் கோடா என்பவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ம-7)

# 14 இந்திய மீனவர்களும் 28 ஆம் திகதிவரை மறியல்

காரைநகர் கோவளம் கடற்கரையில் கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி வந்து யாழ்ப்பாணம் - காரைநகர் - கோவளம் கடற்பரப்பில் உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால், ஒரு படகுடன் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பதின்நான்கு பேரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் யாழ்ப்பாணம் நீரியல்வள திணைக்களத்தில் பாரப்படுத்தப்பட்ட பின்னர் நீரியல்வள திணைக்களத்தினர் அவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் அவர்கள் 14பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார். இந்நிலையில் 12 மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இரு மீனவர்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7,33)

# இசை நிகழ்ச்சி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த ஹரிகரனின் இசை நிகழ்வு பிற்போடப்பட்டது. இந்த இசை நிகழ்ச்சியானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது என ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.

காலநிலை சீரின்மை காரணமாக திகதி பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் தென்னிந்திய பாடகர்கள், நடிகர்கள் மற்றும் இசையமைப்பாளர்கள் உள்ளிட்ட பல பிரபலங்கள் தற்போது இலங்கைக்கு வருகை தந்த நிலையில் இசை நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



17

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**முதலில் புதிய சட்டத்தின் மூலம் ரத்து செய்யப்படும் மூன்று சட்டங்கள் பற்றி பார்ப்போம்.**

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழலுக்கு எதிரான சட்ட மூலம் சட்டமாக நிறைவேற்றப்படும் போது நாட்டில் நடைமுறையில் உள்ள மூன்று சட்டங்கள் நீக்கப்படும் என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவின் வழக்கறிஞர் மற்றும் ஆராய்ச்சி முகாமையாளர் ஜனித்ரிகா ஜய சுந்தர தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இலஞ்சம் தொடர்பான சட்டங்களைப் பார்க்கும் போது, இலஞ்சச் சட்டம் 1954 இல் வந்தது. அதைத் தொடர்ந்து 1994 இல் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் ஆணைக்குழு சட்டம் வந்தது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டம் 1975 இல் கொண்டுவரப்பட்டது. இவை மூன்றும் புதிய இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டமூலம் இல்லா தொழிக்கப்படும்.

அதாவது அந்த மூன்று தனித் தனிச் சட்டங்கள் ஒழிக்கப்பட்டு, அவை அனைத்தும் ஒரே சட்டமாக மாறியுள்ளன. இது ஊழல் தடுப்பு சட்டம் என்று அழைக்கப்படுகிறது.

**புதிய ஊழல் தடுப்புச் சட்டம் ஏன்?**

ஊழல் தடுப்பு மசோதா கொண்டு வரப்படும் என கடந்த ஆண்டு நீதி அமைச்சு தெரிவித்திருந்தது. மேலும், சர்வதேச நாணய நிதியம் ஊழலுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூறியிருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் இதுவும் ஒன்று. இலங்கையின் ஊழல் தடுப்புச் சட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று IMF கேட்டிருந்தது. அதற்குக் காரணம், ஊழல் நடக்கும் பலவீனமான பகுதிகளில் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

மேலும் இது திடீரென கொண்டு வரப்பட்டதாக கூறமுடியாது. ஏனென்றால் கடந்த ஆண்டு முதல், ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா அமைப்பு மற்றும் பல சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து இதில் என்ன சேர்க்கப்பட வேண்டும் என்று பொதுமக்களிடமிருந்து பல கருத்துக்களை எடுத்து நீதி அமைச்சுக்கு வழங்கியிருந்தனர். கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் பல சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால், புதிய மசோதாவில் பல சாதகமான நிலை உள்ளன.

**ஊழல் தடுப்புச் சட்டத்தால் என்னென்ன சட்டப்பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன?**

மற்ற மூன்று சட்டங்களுடன் ஒப்பிடுகையில், புதிய ஊழல் தடுப்புச் சட்டத்தில் பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. புதிய சட்டத்தின் மூலம் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில், பாலியல் லஞ்சம் மற்றும் தனியார் நிறுவனங்களில் லஞ்சம் ஆகியவை புதிய சட்டத்தின் கீழ் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளன.

லஞ்சம் என்று அழைக்கப்படுவது ஒரு உதவிக்குறிப்பு என்றும் வரையறுக்கப்படுகிறது. இதன் பொருள் ஒரு உதவிக்குறிப்பு என்பது பணமாக இருக்கலாம். அல்லது அது ஒரு வேலையாக இருக்கலாம், அல்லது அது ஒரு ஒப்பந்தமாகவும் இருக்கலாம்.

ஆனால் இலங்கையின் இலஞ்சச் சட்டத்தின் கீழ் அது பாலியல் சலுகையாக நீண்டகாலமாக அங்கீகரிக்கப்படவில்லை. "இது நிறைய நடக்கிறது. உதாரணமாக, வேலை பெற பாலியல் லஞ்சம் கேட்கப்படுகிறது. ஆனால் அது இலங்கையின் இலஞ்ச சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கருதப்படவில்லை.

புதிய சட்டம் பாலியல் சலுகைகள் தவறானவை என்று அடையாளம் கண்டுள்ளது. இது ஒரு தவறு என்று வரையறுக்கப்பட்டது மிகவும் நல்ல மாற்றமாகும்.

இலங்கையின் தனியார் துறையில் இலஞ்சம் வாங்குவது இவ்வளவு காலமாக குற்றமாக சேர்க்கப்படவில்லை. "இவ்வளவு காலம் அரசு நிறுவனம் தொடர்பான நிகழ்வுகள் மட்டுமே லஞ்ச ஒழிப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் புதிய சட்டத்தில், தனியார் துறை அலுவலகங்களில் லஞ்சம் வாங்குவதை குற்றமாக சேர்க்க முன்மொழியப்பட்டுள்ளது.

இப்புதிய சட்டத்தில் தனியார் நிறுவனத்தின் இயக்குநரோ அல்லது எந்த மட்டத்தில் உள்ள அதிகாரியோ லஞ்சம் வாங்கினாலும் அல்லது லஞ்சம் கொடுத்தாலும் அது தவறு என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பான லஞ்சம் இவ்வளவு காலமாக உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.

ஆனால், புதிய சட்டத்தில், விளையாட்டின் உயிர்வாழ்வுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களைச் செய்தால், அது இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்று தனிப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் கீழ் மேட்ச் பிக்சிங் (Match fixing) போன்ற விடயங்கள் விவாதிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

**தற்போதுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டம் என்ன?**

தற்போதைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின்படி, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினால், அவர் பதவியேற்கும் போது சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கையை வழங்க வேண்டும்.

அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். மூத்த அரசு அதிகாரிகளும் இதைச் செய்கிறார்கள்.

மேலும், தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் தேர்தலில் நிற்கும் போது, சொத்து, கடன் விபரங்களை வழங்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய சட்டத்தின்படி, வேட்புமனு தாக்கல் செய்த மூன்று மாதங்களுக்குள் வழங்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் கீழ் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய நபர்களின் பட்டியலில் நாட்டின் ஜனாதிபதியும் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிப்படைத்தன்மை சர்வதேச நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய சட்டத்தில் ஜனாதிபதியும் சொத்துக் கடன் அறிவிப்பை வழங்க வேண்டும் என்று சேர்க்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்டத்தில் குடியரசுத் தலைவர் இடம்பெறவில்லை.

**2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம்**

ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின் குறித்த சில ஏற்பாடுகளுக்கும் மற்றும் வேறு சர்வதேச ரீதியில்ஏற்று அங்கீகரிக்கப்பட்ட நெறிகள், நியமங்கள் அத்துடன் மிகச்சிறந்த செயல்முறைகள் என்பவற்றுக்கும் பயன்கொடுப்பதற்கும் இலஞ்சம், ஊழல் பற்றிய சார்த்துதல்களை மற்றும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகளை மற்றும் இணைந்த தவறுகளைக் கண்டுபிடித்து புலனாய்வு செய்வதற்கும் இலஞ்சம், ஊழல் பற்றிய தவறுகளுக்காகவும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகளுக்காகவும் மற்றும் வேறு இணைந்த தவறுகளுக்காகவும் குற்றவழக்குகள் தொடுக்கப்படுவதனைப் பணிப்பதற்கும் அவற்றைத் தொடுப்பதற்கும் சுயாதீனமான ஆணைக்குழுவொன்றைத் ஸ்தாபிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும் ஊழற் பழக்கங்களைத் தடுப்பதனை ஊக்குவிப்பதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஊழலை முறியடிப்பதற்கும் பொதுமக்களுக்கு அறிவு புகட்டுவதற்கும் அவர்களிடையே விழிப்புணர்ச்சியை எழுப்புவதற்கும் 26 ஆம் அத்தியாயமான இலஞ்சச் சட்டம், 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டம் என்பவற்றை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கரு மங்களுக்குமான தொரு சட்டம்.

**இச்சட்டத்தின் குறிக்கோள்கள்பின்வருவனவாதல் வேண்டும்**

(அ) ஒரு சனநாயக சமூகத்தின் பொதுநல்வாழ்வின் நீதியான தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கென இலஞ்சத்தையும் ஊழலையும் தடுத்தலும் அடியோடு அழித்தலும்.

(ஆ) ஆளுகையில் வெளிப்படையானதன்மையை அதிகரித்தல்.

(இ) ஆளுகையின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதலும் வகைகூறவேண்டியமையை அதிகரித்தலும்.

(ஈ) அரசாங்கம் தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரித்தலும் ஊழலை அடியோடு அழிப்பதற்குப் பொதுமக்களின் பங்குபற்றுகையை வலுப்படுத்துதலும்.

(உ) இச்சட்டத்தின் கீழான தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இச்சட்டத்தின்கீழ் அதன்மீது சுமத்தப்பட்ட பொறுப்புடைமைகளை நிறைவேற்றுவதற்கும் சுயாதீனமான ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாணத்...

காணப்படுகின்றது.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பாடசாலைகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பாடசாலைகளும் மன்னார் மாவட்டத்தில் 2 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் நேற்று கற்றல் செயற்பாடுகளுக்காக இயங்கவில்லை என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கில் தொடர்ந்தும் அதிக மழை பொழிவதால் இன்று மேலும் பல பாடசாலைகள் இயங்க முடியாமல் பாதிப்படையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## 71 குடும்பங்...

குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாண் மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 38.4 மில்லி மீற்றர் அளவிலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ம-7)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## அமெரிக்கா...

மைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் அமெரிக்காவிற்கு பயணித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் டுபாய் ஊடாக அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரிற்கு பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற பொது ஜன பெரமுன கட்சி மாநாட்டில் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலக பசில் தீர்மானித்திருந்தார்.

இதனையடுத்து, குறித்த பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்காமல் பதவியை வெற்றிடமாக வைப்பதற்கு கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா பயணமான பசில் சுமார் ஒன்றரை மாத காலம் அங்கு தங்கியிருப்பார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## வெள்ளத்தால்...

துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள், வெள்ள அனர்த்தம் காரணமாக தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து, கண்டாவளை மகா வித்தியாலயம், நாகேந்திரபுரம் அ.த.க.பாடசாலை, முரசுமோட்டை அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அந்த மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு, "நளின் ஜவு" நிறுவன உரிமையாளர் சஞ்சீவின் நிதிப் பங்களிப்பில் உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

இதனையடுத்தே பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். இடம்பெயர்ந்துள்ள 86 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும் கண்டாவளைப் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

எனினும் அந்த மக்களுக்கான பாய்கள், போர்வைகள், நுளம்பு வலைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் தேவைப்பாடு நிலவுகிறது. சம நேரத்தில் பொன்னகர் மற்றும் அக்கராயன் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களும் வெள்ள அனர்த்தப் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உலருணவுகள், அத்தியாவசியப் பொருட்களை வழங்க முடிந்தோர் நேரடியாக அந்த மக்களுக்கு வழங்கிவைப்பது சாலப் பெரும் பணியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வடக்கு கல்வி...

நேற்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாகக் கூடி, தமக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளை மாற்றித் தருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சனிடம் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கடல் கடந்த தீவகத்துக்கு அதிபராக, பிரதி அதிபராக நியமனம் தரப்பட்டுள்ளது.

தம்மோடு அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த சிலருக்கு யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு நியமித்துவிட்டு, தம்மைத் தூர இடங்களுக்கு அனுப்புவது நியாயமற்ற செயல் எனக் குறிப்பிட்ட பிரஸ்தாப அதிபர்கள், தமது வயது, குடும்பச் சூழ்நிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டு தங்களுக்குப் பாடசாலைகளை வழங்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதேவேளை குறித்த அதிபர்கள் தமக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சென்று கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் மேன்முறையீடு செய்யுமாறு செயலாளர் பற்றிக் நிரஞ்சன் தெரிவித்தார்.

செயலாளரின் பதிலில் திருப்தியடையாத அதிபர்கள் கைதடியில் உள்ள வடக்கு மாகாணப் பிரதம செயலாளரிடம் சென்று தமது நிலைமையை எடுத்துக்கூறினர்.

அவர்களின் கோரிக்கையைச் செவிமடுத்த பிரதம செயலாளர் அதுபற்றித் தான் பரிசீலிப்பதாக உறுதியளித்தார். (ம)

## அரசி...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்தியாவின் அரசியலமைப்பு, 116 தடவைகள் திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. உலகுக்கு ஏற்ற வகையில் நாமும் அரசியலமைப்பை மாற்ற வேண்டும்.

சிலர் 18 தடவைகள் மாற்றப்பட்டதே அதிகம் எனக் கூறுகிறார்கள். ஆனால், இதுபோதாது. கொரோனா காலத்திற்குப் பின்னர், உலகமே மாற்றமடைந்து விட்டது.

ஐரோப்பிய நாடுகளில் புதிய சட்டங்கள் வந்துள்ளன. பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தங்கள் நாட்டின் ஒட்டு [illegible] கட்டமைப்பையே மாற்றியுள்ளன.

இலங்கையும் உலகத்துடன் போட்டி போட வேண்டுமெனில், நாமும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டு பயணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 50 நீர்த்...

திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷனி விதான பத்திரன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மல்வத்து ஓயாவை பயன்படுத்தும்போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் நீர்ப்பாசன திணைக்களம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

மல்வத்து ஓயாவின் தாழ்நிலப்பகுதி மக்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2023.12.18
சீட்டிழுப்பு இலக்கம் 0158
P 7 7 4 5 9 2 P
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1362
K 05 08 40 76 K
Double Chance 31329

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3574
சீட்டிழுப்பு திகதி 18.12.2023
M 06 27 66 78
M 51119
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.18
சீட்டிழுப்பு இலக்கம் 0641
கும்பம் 12 23 41 48 கும்பம்
38664 20

மஹஜன சம்பத
திகதி 2023/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 5332
Y 7 5 8 2 0 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1680
K 05 10 23 35 80
33372

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2306 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.18 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 25 37 43 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,119,084/-
46770
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.12.2023 வெற்றி வாரம் 040 வர்ணம் ஊதா
U 5 9 9 4 7 4
51173
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,211,947.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சனிதா
திகதி 2023.12.18 வெற்றி வாரம் 4467
43 48 58 72 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,235,480.00
10841
DLB

சீட்டிழுப்பு வாரம் 4018 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.18 தினம் திங்கட்கிழமை
10 32 53 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,251,470.80
984524
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 21 22 23 26 56
1482 2023.12.18 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 479,115,534.20
DLB தொலை பேசி 011-2 333 546-47

ஜயோதா Jayoda
திகதி 2023.12.18 வெற்றி வாரம் 1983 வர்ணம் செம்மஞ்சள்
37 48 50 68 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,009,980.00
05793
DLB

திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2132
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,019,778.40/-
ADA KOTIPATHI
01 18 23 64 X
100765
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி நாயகி கில்மிசாவுக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

(கொழும்பு)

சரிகமப இறுதிப்போட்டியில் வென்ற சிறுமி கில்மிசாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துகளை தெரிவித்தார்.

நேற்று காலை அமைச்சரவை கூட்டம் முடிவுற்ற பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். (ம-7)

# நெல்லியடியில் இருவர் கைது

(கரணவாய்)

விஷேட போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையின் ஓர் கட்டமாக நெல்லியடிப் பொலிஸார் மோப்ப நாய்சகிதம்மேற்கொண்ட நடவடிக்கையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை நெல்லியடி நகர்ப் பகுதியில் பொலிஸார் மோப்ப நாய் சகிதம் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது வீதியால் சென்ற இரண்டு இளைஞர்களை மோப்ப நாய் இனம் காட்டியதை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,60)

# வர்த்தக நிலையங்கள் உடைத்து திருட்டு

## வவுனியாவில் ஐவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் வர்த்தக நிலையங்களை உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஐவரை கைது செய்துள்ளதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மர்லின் அஜந்தா பெபேரா தெரிவித்தார். நேற்று வர்த்தகர் சங்கத்தில் வர்த்தகர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகரில் கண்டி வீதி, பஜார் வீதியில் அண்மையில் வர்த்தக நிலையங்கள் சில உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது பல்வேறு பகுதிகளில் திருட்டில் ஈடுபட்டு நீதிமன்ற நடவடிக்கைக் குட்பட்ட பிரதான குற்றவாளி உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டனர்.

அத்துடன் இரண்டாம் குறுக்குத் தெரு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நிறுத்தப்பட்ட வாகனங்களில் உள்ள பெறுமதி வாய்ந்த சைட் கண்ணாடிகள் திருடப்பட்டுள்ளதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக மேற்கொண்ட நடவடிக்கையில் வெளிமாவட்டத்தை சேர்ந்த கொரியர் நிலையத்தின் முகாமையாளராக கடமையாற்றும் நபர் இந் நடவடிக்கையில் பிரதான சந்தேக நபராக கைது செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக தெரிவித்தார்.

இவ்வாறானவர்கள் தொடர்பில் வர்த்தகர்கள் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது தெரிய வந்துள்ளது என்றார். (ம-7,299)

# சுகாதார அமைச்சின் செயலாளர் கைது

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (CID) நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹியூமன் இம்யூனோகுளோபுலின் என்ற மருந்தை இறக்குமதி செய்தமை தொடர்பில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சந்திரகுப்த நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில்கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## நாடு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது

# 2024 இல் ஒரு குடும்பம் ஜீவிக்க ஒரு இலட்சத்து 75 ஆயிரம் தேவை

(கொழும்பு)

நாடு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. 2024 இல் ஒரு நடுத்தர குடும்பம் ஜீவிக்க ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் தேவை என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முடிவு காரணமாக மக்களும், சமூகமும் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. இந்த வரி வருவாயை அதிகரிக்கவில்லை என்றால், சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

தற்போது நாம் பயங்கரமான இடத்தில் இருக்கின்றோம். நான் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தியது போல் தற்போது சமநிலையாக இருக்கின்றோம். எனினும் இந்த நிலைமையானது வரிசையுகம் இருந்த காலத்திற்கு முன்பு இருந்தயுகத்தை விட மிகவும் மாற்றமான இடத்தில் உள்ளது.

நெருக்கடி முன்னர் வரிசைகள் ஏற்பட்ட காலத்தில் வாழ்வதற்கு 75 ஆயிரம்முதல் 80 ஆயிரம் ரூபாய் வரை தேவைப்பட்டது. இன்று ஒரு குடும்பம் ஜீவிக்க ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது என அரசாங்கத்தின் புள்ளிவிபர நிறுவனங்கள் கூறுகின்றன.

இதன் மூலம் மக்களுக்கு வாழ முடியாத நிலைமையேற்பட்டுள்ளதை காணமுடிகிறது. வரிசையில் இருந்து கூட பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், வரிசைகள் இல்லாமல் போய்விட்டது என்று நாம் மகிழ்ச்சியடைய முடியாது எனவும் ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18242)

076 825 7716 (ஆகாஸ்)

விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (18233)

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

070 375 0002

காணி விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரி, ஐயார் வீதியில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

❖ சாவகச்சேரி பஸ் தரிப்பிடத்தில் இருந்து 1 1/2 Km தூரத்தில்

❖ கண்டி வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில். (18276)

071 898 2009

076 784 5579

+004917115381 71

பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு. **பொன்னம்பலம் கேதீஸ்வரன்**, திரு. **கைலாயபிள்ளை அரிஹரன்** ஆகியோர் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து பயிற்சிகளை நிறைவு செய்து தரம் III அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள். இவர்கள் மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று உயர்ந்த சேவையாளர்களாகத் திகழ வாழ்த்துகிறோம்.




திரு. பொன்னம்பலம் கேதீஸ்வரன்,




திரு. கைலாயபிள்ளை அரிஹரன், (18281)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம்

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

Happy New Year 2024

கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

STUDY IN UK & WORK VISA

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள

வெற்றிகரமான 13 வருட சேவையில்

WEC COLLEGE

புதிய உயர்கல்லூரி வளாகம்

ஆரியகுளம், யாழ்ப்பாணம்

Whatsapp: 0094779265447

0212050988, 0217200989 (18255)

கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் (C-7934)

V2 TRAVELS

எமது கிளைகள்

• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொடிகாமம்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

பண்ணை வேலைக்கு ஆள் தேவை

பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

சம்பளம் 55,000/= EPF & ETF

எம்மால் முழுமையாக கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (18283)

(தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்)

077 127 8122

Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை (18234)

VISA CONSULTANT

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

077 038 5584

CANADA

VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7934)

0777-068-777

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.